**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No. 336/2024**

திரு. நூர் முகமது (P.W.–1) **06.02.2026.**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் திருப்பூரில் நிறைவேற்று மனு எண். 57/2024 வழக்கு 2ம் பிரதிவாதி எனக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார் என்றால் சரி. 2ம் பிரதிவாதி அவருடைய சொத்துக்களில் இருந்து காலி செய்து நான் கொடுக்க வேண்டும் என்றுதான் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். 2ம் பிரதிவாதி எனக்கு எதிராக திருப்பூர் வாடகை கட்டுப்பாட்டு நீதிமன்றத்தில் வாடகை கட்டுப்பாட்டு மனு எண். 19/2012 ஐ தாக்கல் செய்தார் என்றால் தவறு. அவர் தாக்கல் செய்யவில்லை நான் தான் தாக்கல் செய்தேன். நான் என்ன மனு தாக்கல் செய்தேன் என்றால் முதல் பிரதிவாதிக்கு பொது அதிகார ஆவணம் கொடுத்ததை பொறுத்து தாக்கல் செய்தேன். தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் வாடகை கட்டுப்பாட்டு மனு எண். 19/2012 2ம் பிரதிவாதி தாக்கல் செய்து அவருக்கு ஆதரவாக தீர்ப்பு ஏற்பட்டுள்ளது என்றாலும் தவறு. வாடகை கட்டுப்பாட்டு மனு எண். 19/2012 ஐ எதிர்த்து மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மேல் முறையீட்டு மனு எண். 1/2022 ஐ தாக்கல் செய்து விசாரணைக்கு பிறகு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரி. உடல்நிலை சரியில்லாததால் அந்த வழக்கில் ஆஜராகவில்லை. தற்போது நான் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளேன்.

இந்த விவரங்களை எல்லாம் மறைத்து கறைபடிந்த கரங்களுடன் பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. தாவாவில் வழக்குமூலமே இல்லை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. ஏற்கனவே தாவாச்சொத்தை பொறுத்து ஏற்பட்ட வழக்கு விவரங்களை மறைத்து

இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் தவறு. தாவாச்சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை ஏற்கனவே என்னுடைய பொது அதிகார முகவர் விற்பனை செய்துவிட்டார் என்றால் தவறு. தாவாவில் முதல் பிரதிவாதியிடம் வட்டிக்கு பணம் வாங்கியதாக சொல்வதே பொய் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு அனுப்பப்பட்ட சட்ட அறிவிப்பில் அறிவிப்பு விவரங்கள் இல்லாமல் அனுப்பப்பட்டது என்றால் தவறு. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் கவர் நான் அனுப்பியது என்றால் நான் அதில் உள்ள முகவரியை எழுதவில்லை. தாவாவில் கோரியுள்ள பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல, தாவா செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் தவறு.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

**ஒம்/- கே. ஆர். கண்ணன்.,**
கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.